FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE
முதல் தகவல் அறிக்கை INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section ~~154 Cr.P.C.~~ 173 BNSS
(~~குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~) 64 C 8120335

1. District : Namakkal PS: V&AC Year: 2025 FIR No.: 04/AC/2025 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 11.09.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Corruption (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : — Date from : 05.09.2025 Date to : 09.09.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : — Time from : 1200hrs Time to : 11.15hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 11.09.2025 Time : 06.45 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-II Time : 07.45 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ ~~Oral~~ : Computer typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 50kms, North west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும். எத்திசையும்

Beat Number : — (b) Address : Panchayat Union Elementary School, Kandipudur, Namakkal Dt.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S.Jayavel (b) Father's/ Husband's Name : Singaravelu
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு Age-44 நாட்டினம் Indian வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : D.No.3/64C, Punakadu, Karate Muniappan
தொழில் Astrologer முகவரி Swamy temple, Sri Veera Sakthi Nagamma temple, Kaliyanur Agraharam, Kumarapalayam, Namakkal District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Vijaya Kumar, Head Master, Panchayat Union Elementary School, Kandi pudur, Namakkal Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay by the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J James 11/09/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

J. [illegible] 11/09/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.09.2025 at. 08.00hrs

Name: பெயர் S. PRABHU
Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police,
V&AC, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 4/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

இன்று 11.09.2025-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 06.45 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, புகார்தாரர் திரு.S.ஜெயவேல் (வயது-44), S/o. சிங்காரவேலு, கதவு எண்.3/64-C, புறாக்காடு, கராத்தே முனியப்பன் சுவாமி கோவில், ஸ்ரீ வீரசக்தி நாகம்மா கோவில், களியனூர் அக்ரஹாரம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் S.ஜெயவேல் (வயது-44), S/o. சிங்காரவேலு, கதவு எண்.3/64-C, புறாக்காடு, கராத்தே முனியப்பன் சுவாமி கோவில், ஸ்ரீ வீரசக்தி நாகம்மா கோவில், களியனூர் அக்ரஹாரம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, நாமக்கல். ஐயா, நான் குமாரபாளையம் தாலுக்கா களியனூர் அக்ரஹாரம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் ஜோதிடம் பார்த்து வருகிறேன். நான் கண்டிப்புதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 1990-91-ம் வருடம் ஐந்தாம் வகுப்பு வரை படித்து பாஸ் செய்துவிட்டேன். குடும்ப சூழ்நிலையின் காரணமாக படிப்பை என்னால் தொடர முடியவில்லை. ஆகவே நான் பள்ளிபாளையத்தில் உள்ள என் அப்பாவின் மளிகை கடையில் வேலை செய்து வந்தேன். நான் தற்போது இ-சேவை மையம் துவங்க இருப்பதால் எனது படிப்பை டுட்டோரியல் மூலம் படிக்க வேண்டி என்னுடைய ஐந்தாம் வகுப்பு மாற்றுச்சான்றிதழை பெறுவதற்காக கடந்த 19.2.2025-ஆம் தேதி நான் படித்த பள்ளியின் தலைமை ஆசிரியரை சந்திக்க சென்றேன். அன்று அவர் பள்ளியில் இல்லாத காரணத்தால் அங்கிருந்த மற்றொரு பெண் ஆசிரியையிடம் எனது மாற்றுச்சான்றிதழ் பெற வேண்டி விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அவர் அதை வாங்கிக்கொண்டு தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமார் வந்தவுடன் அவரிடம் கொடுத்து விடுவதாக சொல்லி எனது செல்போன் நெம்பரை வாங்கிக் கொண்டார். நானும், தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமார் அவர்களின் செல்போன் நெம்பரை வாங்கிக் கொண்டேன்.

அதன்பிறகு நான் கடந்த 5.9.2025-ம் தேதி காலை சுமார் 8.25 மணியளவில் எனது செல்போன் நெம்பர் 95242-15442-ல் இருந்து நான் படித்த பள்ளியின் தற்போதைய தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமார் அவர்களின் செல்போன் நெம்பர் 99761-82584-க்கு தொடர்பு கொண்டு பேசிய போது, அவர் என்னிடம், தான் இன்று பள்ளி விடுமுறையாக இருந்தாலும் தான் சில வேலைகள் செய்வதற்காக பள்ளிக்கு வர இருப்பதாக சொல்லி என்னை நேரில் வரச்சொன்னார். அதன்பிறகு நான் எனது ஊரைச் சேர்ந்த எனது நண்பர் மணிகண்டனுடன் அன்று பகல் சுமார் 12 மணியளவில் மீண்டும் ஒரு விண்ணப்பத்துடன் பள்ளிக்கு சென்று அங்கிருந்த தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமாரிடம் அந்த விண்ணப்பத்தினை கொடுத்து எனது படிப்பை தொடர வேண்டி பள்ளி மாற்றுச்சான்றிதழ் கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் 35 வருடம் கழித்து வந்து TC கேக்குறிங்க, இதை சென்னையில் இருக்கும் பள்ளிக் கல்வித்துறை அலுவலகத்தில் இருந்து தான் பெறவேண்டும் என்றும், அதற்கு தனக்கு தனியாக ரூ.6,000/- கொடுக்க வேண்டும் என்றும், அதுபோக தேடுதல் கட்டணமாக வருடத்திற்கு தலா ரூ.10/- வீதம் ஸ்டேட் பேங்கில் சலான் கட்டி தன்னிடம் சலான் கொடுத்தால் தான் மாற்றுச் சான்றிதழ் கொடுக்க முடியும் என்று சொன்னார். அதற்கு நான் ஏதாவது செலவுக்கு வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் தனியாக இதற்கு முயற்சி செய்தால் இருபது, முப்பது ஆயிரம் வரை செலவாகும் என்று சொன்னார். எனவே நான் ஒன்றும் சொல்லாமல் மணிகண்டன் அவர்களுடன் அங்கிருந்து வந்துவிட்டேன். அதன்பின்னர் 9.9.2025-ம் தேதி காலை சுமார் 11.15 மணியளவில் நான் ஏற்கனவே படித்த பள்ளிக்கு சென்று தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமார் அவர்களை சந்தித்து எனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் பற்றி கேட்டேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே கேட்டபடி பணம் கொண்டு வந்தீங்களா என்று கேட்டார். அப்போது நான் அவரிடம் கொஞ்சம் கம்மி பண்ணிக்கோங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி உங்களுக்காக 1,000 ரூபாய் குறைத்துக் கொள்கிறேன் என்றும், மீதி ரூ.5,000/-த்தை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு குறைவாக கொடுத்தால் பண்ணமுடியாது என்றும் கூறினார். மேலும் அந்த பணம் கொடுத்தால் தான் உங்களுக்கு மாற்றுச் சான்றிதழ் கிடைக்கும் என்றும் கறாராக சொல்லிவிட்டார். லஞ்சமாக பணம் ரூ.5,000/- கொடுத்து எனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் பெற எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் தலைமை ஆசிரியர்

திரு.விஜயகுமார் அவர்கள் எனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்க லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-த்துடன் அவரை நேரில் சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட தலைமை ஆசிரியர் திரு.விஜயகுமார் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- xxxxx (S.Jayavel) 11/09/2025.

Sir,

I received the above computer typed complaint on 11.09.2025 at 06.45 hours and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption, Crime No.4/AC/2025 u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 11.09.2025 at 07.45 hours. Sd/-(xxxxxxx) 11.09.2025. (S.Prabhu) Inspector of Police, V&AC., Namakkal.

Original FIR along with original computer typed complaint of Tr.S.Jayavel are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

11/09/2025

(S. Prabhu)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.